***ஐயம் :*** மலக்குகளுக்கு இறக்கை இருக்கிறது என ஒரு ஆலிம் கூறுகிறார். உண்மையா? மேலும் கிருஸ்துவர்கள் சம்மனசு என்ற தேவதைப் படத்தை வீட்டில் வைத்திருப்பது போல, மலக்குகள் பெண்கள் என்றும் கூறுகிறார்? இதுவும் உண்மையா? மலக்குகளின் உருவம் சாதாரண மனித உருவம் போன்றதா? இந்தக் கேள்விகளுக்கு ஆதாரங்களுடன் பதில் தாருங்கள்.

*பக்கீர் மைதீன், கும்பகோணம்*

***தெளிவு :*** முதல் கேள்வி உண்மை; பிற்பகுதி வினா உண்மை அல்ல. மலக்குகள் பெண்கள் அல்ல என்பதற்கான சான்றை குர்ஆன் தருகிறது.

> **“அல்லது நாம் மலக்குகளைப் பெண்களாகவா படைத்தோம்? (இவ்வாறு கூறுகின்றான்) அவர்கள் (அதற்கு) சாட்சிகளா?”**
>
> **“அறிந்து கொள்க! நிச்சயமாக அவர்கள் தங்கள் கற்பனையில்தான் (அவ்வாறு) கூறுகின்றனர்.”** *அல்குர்ஆன் 37:150,151*

மலக்குகளுக்கு இறக்கைகள் உண்டு என்பதற்கான சான்றை குர்ஆன் தருகிறது.

> **“எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே; வானங்களையும், பூமியையும் படைத்தவன்; இரண்டிரண்டும், மும்மூன்றும், நன்னான்கும் இறக்கை உள்ளவர்களாக மலக்குகளைத்தன் தூதை எடுத்துச் செல்வோராக ஆக்கினான்; தான் நாடியதைப் படைப்பிலே மிகுதப் படுத்துவான். நிச்சயமாக அல்லாஹ் அனைத்துப் பொருள்களின்மீதும் பேராற்ற லுடையவன்”.** *அல்குர்ஆன் 35:1*

சம்மனசு என்ற தேவதைப் படம் கற்பனையில் உருவாக்கப்பட்டதாகும். அதுபோன்றெல்லாம் மலக்குகள் இருக்கமாட்டார்கள்.

மலக்குகளின் உருவம் :

> **“நிச்சயமாக அவர் (நபி(ஸல்) அவர்கள்) அவரைத் தெளிவான அடிவானத்தில் கண்டார்”.** *அல்குர்ஆன் 81:23*
>
> **“மேலும், நிச்சயமாக அவர் (நபி(ஸல்) அவர்கள்) மற்றொரு முறையும் இறங்கக் கண்டார்”** *அல்குர்ஆன் 53:13*
>
> **“இது (இந்த இருவசனங்களை) பற்றி நபி(ஸல்) அவர்களிடம் முதன் முதலில் கேட்டவள் நான்தான். அப்படிக்கேட்டபோது நபி(ஸல்) அவர்கள், ‘அது ஜிப்ரீல்(அலை) அவர்களைப் பற்றியதாகும். அவர்கள் எந்த வடிவில் படைக்கப்பட்டார்களோ அதே வடிவில் வானம் பூமிக்கு இடைப்பட்ட இடங்களை நிரப்பியவராக 2 தடவைகள்தான் நான் அவர்களைப்**

**பார்த்திருக்கிறேன்"** என்று கூறினார்கள். இதை அன்னை ஆயிஷா(ரழி) அவர்கள் தெரிவித்தார்கள். *அறிவிப்பவர் : அன்னை ஆயிஷா(ரழி), நூல் : முஸ்லிம்*

81வது அத்தியாயத்தில் 19 முதல் 24 வரை உள்ள வசனங்களிலும், 53 வது அத்தியாத்தில் 3 முதல் 18 வரை உள்ள வசனங்களிலும் மேலதிகமான விவரங்கள் கூறப்பட்டுள்ளன.

> **"அல்லாஹ்வின் தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள் : நான் நடந்து போய்க் கொண்டிருக்கும் போது வானத்திலிருந்து ஒரு குரலைக் கேட்டு என் பார்வையை உயர்த்திப் பார்த்தேன். அப்போது ஹிரா குகையில் என்னிடம் வந்த அதே வானவர் வானத்துக்கும் பூமிக்கும் இடையே ஒரு ஆசனத்தில் அமர்ந்திருந்ததைக் கண்டு அச்சமுற்றேன். (வீட்டிற்குத்) திரும்பி வந்து (கதீஜாவிடம்) என்னைப் போர்த்துங்கள் என்றேன். அப்போது 'போர்வை போர்த்தியவரே எழுவீராக! (மக்களுக்கு) எச்சரிக்கை செய்வீராக!' என்பது வரை 5 வசனங்களை இறைவன் அருளினான்".**

வஹீ நின்று போயிருந்த இடைக் காலத்தைப் பற்றிக் கூறும் போது ஜாபிர் பின் அப்துல்லாஹ்(ரழி) இதை அறிவித்தார். அதன் பின் வஹீ அடிக்கடி தொடர்ந்து வரலாயிற்று என்று மேலும் கூறினார்.

*நூல்கள் : புகாரீ ஹதீஸ் எண் 4, ரஹ்மத் அறக்கட்டளை*

மேலும் நபி(ஸல்) அவர்களை ஜிப்ரயீல்(அலை) அவர்கள் மனித உருவில் சில தடவைகள் சந்தித்ததாகவும் ஹதீஸ்கள் உள்ளன. மலக்குகளுக்கு இறக்கை இருப்பது உண்மை என்பதையும், மலக்குகள் பெண்கள் அல்ல என்பதையும், மலக்குகளின் உண்மைத்தோற்றம் மனிதர்களைப் போல் அல்ல என்பதையும் தெரிந்து கொள்ளுங்கள்.

***ஐயம் :*** அழகான விலை அதிகமுள்ள எனது கைக்கெடிகாரம் ஒன்றை என் நண்பர் ஒருவருக்கு ஒரு சந்தர்ப்பத்தில் அன்பளிப்பாகக் கொடுத்தேன். அதை நான் மிகவும் விரும்பியதால், அதே போன்று வேறொன்று வாங்கிக் கொள்ளலாம் என்று அப்போது நினைத்தேன். இது நடந்து 2 ஆண்டுகள் ஆகி விட்டது. ஆனால் அது போன்று இன்னும் எனக்குக் கிடைக்கவில்லை. என் நண்பர் அதை அணிந்திருக்கும் போதெல்லாம் அதன் அழகு என்னை ஈர்க்கிறது. அவருக்கு பிடித்த ஒரு கைக்கடிகாரத்தை வாங்கிக் கொடுத்துவிட்டு, அதை நான் திரும்பப் பெற்றுக் கொள்ளலாமா?

*அப்துல் வஹாப், புதுப்பேட்டை, சென்னை*

தெளிவு : **"தான் செய்த அன்பளிப்பைத் திரும்பப் பெற்றுக் கொள்பவன், தன் வாந்தியைத் தானே திரும்பத் தின்கின்ற நாயைப் போன்றவன் ஆவான். (இது போன்ற) இழிகுணம் நமக்கு அழகல்ல"** என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். *அறிவிப்பவர் : இப்னு அப்பாஸ்(ரழி), நூல் : புகாரீ*

எனவே நீங்கள் அன்பளிப்பாகக் கொடுத்த அக்கைக் கடிகாரத்தை மீண்டும் பெற்றுக் கொள்ள முற்படாதீர்கள்.

2005 அந்நஜாத்